සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

62 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

| | | |
|---|---|---|
| පුරවැසි අධ්‍යාපනය | I, II | පැය තුනයි |
| குடியியற் கல்வி | I, II | மூன்று மணித்தியாலம் |
| Civics Education | I, II | Three hours |

## (62) குடியியற் கல்வி I

**கவனிக்க :**
(i) **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** கடந்த காலத்தில் நேரடி சனநாயக தத்துவங்களின் அடிப்படையில் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபட்ட அரசு,
(1) பிரித்தானியா (2) ஏதென்சு (3) சுவிற்சர்லாந்து (4) இந்தியா

**2.** இலங்கைப் பிரசையொருவருக்கு வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான தகைமையைப் பெறும் வயதெல்லையாகக் கருதுவது அவர்
(1) 15 வயதைப் பூரணப்படுத்தியிருத்தலாகும். (2) 18 வயதைப் பூரணப்படுத்தியிருத்தலாகும்.
(3) 21 வயதைப் பூரணப்படுத்தியிருத்தலாகும். (4) 24 வயதைப் பூரணப்படுத்தியிருத்தலாகும்.

**3.** அரசொன்றின் அடிப்படைப் பண்புகளைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
(1) நிலப்பரப்பு, சனத்தொகை, அரசாங்கம், சுயாதீனமான அதிகாரம்
(2) நிலப்பரப்பு, அரசாங்கம், சுயாதீனமான அதிகாரம், எதிர்க்கட்சி
(3) சனத்தொகை, சுயாதீனமான அதிகாரம், நீதித்துறை, அரசாங்கம்
(4) சனத்தொகை, அரசாங்கம், சனாதிபதி, நிறைவேற்று அதிகாரம்

**4.** சனநாயக சமூகமொன்றின் பிரசையொருவரினால் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய இரண்டு வகையான கடமைகள்,
(1) சிவில் மற்றும் அரசியல் கடமைகள் ஆகும்.
(2) கலாசார மற்றும் சமயக் கடமைகள் ஆகும்.
(3) பொருளாதார மற்றும் சமூகக் கடமைகள் ஆகும்.
(4) சட்ட மற்றும் ஒழுக்க ரீதியான கடமைகள் ஆகும்.

**5.** சனநாயக சமூகமொன்றில் ஆட்சி தொடர்பான விவகாரங்களை மேற்கொள்வதற்கு மக்களுக்கு இருக்க வேண்டிய அதிகாரம், அறியப்படுவது
(1) வாக்குரிமை எனவாகும். (2) மீயுயர் அதிகாரம் எனவாகும்.
(3) இறைமை எனவாகும். (4) அரசியலமைப்பு அதிகாரம் எனவாகும்.

**6.** மத்திய அரசிடம் உள்ள நிர்வாக அதிகாரத்தைப் பிராந்திய நிர்வாக அலகுகளுக்கு கையளித்தல் என்பது
(1) அதிகாரத்தைப் பரவலாக்குதலாகும். (2) அதிகாரத்தைப் பகிர்தலாகும்.
(3) அதிகாரத்தைக் கையளித்தலாகும். (4) அதிகாரத்தை நெறிப்படுத்தலாகும்.

**7.** கூட்டாட்சி அரசொன்றில் அதிகாரப் பகிர்வு நடைபெறுவது
(1) சனாதிபதிக்கும் மத்திய அரசுக்கும் இடையிலாகும்.
(2) சனாதிபதிக்கும் பிராந்திய அரசுகளுக்கும் இடையிலாகும்.
(3) மத்திய அரசுக்கும் பிராந்திய அரசின் ஆளுனருக்கும் இடையிலாகும்.
(4) மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுகளுக்கும் இடையிலாகும்.

**8.** 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாகாண சபையொன்றின் அமைச்சரவையானது முதலமைச்சர் உட்பட
(1) நான்கு பேர்களைக் கொண்டது. (2) ஐந்து பேர்களைக் கொண்டது.
(3) ஆறு பேர்களைக் கொண்டது. (4) ஏழு பேர்களைக் கொண்டது.

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka.

9. சுவிற்சர்லாந்து அரசியல் முறைமையில் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் போது பிரச்சினையான நிலைமை உருவாகுமாயின் அதனைத் தீர்க்கும் அதிகாரம் இருப்பது
(1) தேசிய சபைக்காகும். (2) கன்ரன் நீதிமன்றத்திற்காகும்.
(3) கூட்டாட்சி மகா சபைக்காகும். (4) கூட்டாட்சி சபைக்காகும்.

10. பல்கலாச்சார சமூகமொன்றில் நல்லாட்சியின் காரணமாக ஏற்படும் முக்கியமான விளைவு,
(1) ஒருவரை ஒருவர் மதிக்கப் பழகுதல்.
(2) பல அரச கரும மொழிகளைப் பயன்படுத்த முடிதல்.
(3) பல்வேறு கலாசாரங்கள் பற்றிய விழிப்புணர்வைப் பெறமுடிதல்.
(4) பல்வேறு இனப் பிரிவுகள் மற்றும் சமூகங்களுக்கிடையே பரஸ்பர நம்பிக்கையை உறுதிசெய்தல்.

11. மனித தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முற்படும் போது பிரச்சினைகள் தோன்றுவதற்கு முக்கிய காரணமாக அமைவது,
(1) தேவைகளை நிறைவேற்றுவதற்கான வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருத்தலாகும்.
(2) நபருக்கு நபர் தேவைகள் வேறுபடுதல்.
(3) தேவைகளை நிறைவேற்றுவதற்கான அறிவு போதுமானதாக இல்லாதிருத்தல்.
(4) தேவைகளை நிறைவேற்றுவதற்கான வசதிகள் போதுமானதாக இல்லாதிருத்தல்.

12. பொருளாதாரம் அல்லாத பண்டமொன்றையும் பொருளாதாரப் பண்டமொன்றையும் ஒழுங்குமுறையில் காட்டும் சரியான விடை எது?
(1) நீரும் உணவும் (2) நீரும் வளியும்
(3) மருந்துகளும் சூரிய ஒளியும் (4) உடையும் உணவும்

13. பொருளாதாரச் செயன்முறை ஒன்றினை வரிசை ஒழுங்கில் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
(1) உற்பத்தி, நுகர்வு, விநியோகம் (2) உற்பத்தி, விநியோகம், நுகர்வு
(3) உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், விநியோகம் (4) உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், நுகர்வு

14. நபரினுள், நபர்களுக்கிடையே, குடும்பத்தினுள், குடும்பங்களுக்கிடையே ஏற்படும் மோதல்கள் அறியப்படுவது
(1) சர்வ மோதல்கள் எனவாகும். (2) குடும்ப மோதல் எனவாகும்.
(3) சிக்கலான மோதல்கள் எனவாகும். (4) நபர்களுக்கிடையிலான மோதல் எனவாகும்.

15. மோதல்களைத் தவிர்ப்பதற்காக ஒரு பிரசையினால் வளர்த்துக் கொள்ள வேண்டிய நபர் சார்ந்த குணவியல்புகளை உள்ளடங்கும் விடையைத் தெரிவு செய்க.
(1) மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், ஏனையோரின் கருத்துக்களை மதித்தல், நியாயத் தன்மை
(2) தாங்கும் சக்தி, ஈகை, சமனான அனுபவம்
(3) பயனுறுதியுள்ள தொடர்பாடல், ஆக்கபூர்வ சிந்தனை, செவிமடுத்தல்
(4) ஆத்ம விளக்கம், பொறுமை, சகிப்புத் தன்மை

16. சட்டத்தின் பிரதான குறிக்கோள்
(1) மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நிர்வாகத்தை முன்னெடுக்க வழிகாட்டுதல்
(2) மக்களினது உயிர், சொத்துக்கள் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மனித நடத்தைகளைக் கட்டுப்படுத்தல்
(3) மக்கள் மத்தியில் சட்டம் தொடர்பான அறிவை உறுதி செய்தல்
(4) சமூகத்தில் தவறிழைப்பவர்கள் அனைவரையும் நீதிமன்றத்தின் முன் நிறுத்துதல்

17. இலங்கையில் இறுதியானதும் மிக உயர்ந்த நீதிமன்றமாகவும் செயற்படுவது,
(1) உயர் நீதிமன்றம் (2) மேன் முறையீட்டு நீதிமன்றம்
(3) மேல் நீதிமன்றம் (4) யுத்த நீதிமன்றம்

18. கொலைகள் தொடர்பான வழக்குளை விசாரிக்கும் அதிகாரம் உள்ள நீதிமன்றமாவது,
(1) மேன் முறையீட்டு நீதிமன்றம் (2) மாகாண உயர் நீதிமன்றம்
(3) மாவட்ட நீதிமன்றம் (4) உயர் நீதிமன்றம்

19. மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு அத்தண்டனையை நிறைவேற்றுமாறு தேவையான சிபாரிசுகளை சனாதிபதிக்கு வழங்குவது
(1) சட்டமா அதிபரினாலாகும். (2) பிரதம நீதியரசரினாலாகும்.
(3) சொலிஸ்டர் ஜெனரலினாலாகும். (4) நீதி அமைச்சரினாலாகும்.

20. 1931 ஆம் ஆண்டில் நடைபெற்ற டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனம் பின்வருவனவற்றில் எது?
(1) அரசியலமைப்புச் சபை (2) அரச சபை
(3) தேசிய அரச சபை (4) பாராளுமன்றம்

21. 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் மூலம் ஏற்படுத்தப்பட்ட பிரதான அரசியலமைப்பு மாற்றம்
(1) விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை அறிமுகம் செய்யப்பட்டமையாகும்.
(2) சர்வசன வாக்கெடுப்பு முறைமை அறிமுகஞ் செய்யப்பட்டமையாகும்.
(3) நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி பதவியை ஏற்படுத்தியமையாகும்.
(4) மாகாண சபை முறையை அறிமுகஞ் செய்தமையாகும்

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka.
Department of Examinations, Sri Lanka.

**22.** 19 ஆவது அரசியல் சீர்திருத்தத்தின்படி சனாதிபதியினால் பாராளுமன்றத்தைக் கலைக்க முடிவது,
(1) பாராளுமன்றத்தின் பதவிக்காலம் குறைந்தபட்சம் ஒரு வருடம் முடிவடைந்த பின்னராகும்
(2) பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் என பிரதமர் கோரிக்கை விடுக்கும் போதாகும்
(3) சனாதிபதியின் விருப்பின்படி எந்த ஒரு சந்தர்ப்பத்திலாகும்.
(4) பாராளுமன்றம் உருவாகி $4\frac{1}{2}$ ஆண்டுகள் பதவிக்காலம் முடிவடைந்த பின்னராகும்

**23.** இலங்கையின் உள்ளூராட்சி நிறுவகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளில் பொதுப் பயன்பாட்டுச் சேவைகளில் **அடங்காத** பணியொன்றாவது,
(1) பொது இடங்களுக்கு மின்சாரம் வழங்கலாகும்
(2) மக்கள் சந்தைகளை நிர்வகித்தல்.
(3) பொது மலசல கூடங்களை நிறுவுதலும் பராமரித்தலும்
(4) பொது வாசிப்பு நிலையங்களை நிருவகித்தல்

**24.** மனிதனின் தலையீட்டினால் கட்டியெழுப்பட்டுள்ள சமயங்கள், பேதங்கள், உரிமைகள், மரபுரிமைகள், பழக்கவழக்கங்கள், கடமைகள், சட்டரீதியான சம்பிரதாயங்கள் போன்ற அம்சங்கள் உள்ளடங்கும் சுற்றாடல் பின்வரும் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?
(1) சமூகச் சுற்றாடல் (2) இயற்கைச் சுற்றாடல்
(3) உயிரினச் சுற்றாடல் (4) மனிதச் சுற்றாடல்

**25.**
A - கணினி எழுத்தறிவு
B - மெய்நிகர் மொத்த தேசிய உற்பத்தி
C - பசுமை மொத்த உள்நாட்டு உற்பத்தி
D - பொருளாதார வளர்ச்சி வீதம்
E - பௌதிக வாழ்க்கைத்தரச் சுட்டி

அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகுதி விதிகளில் மரபுரீதியான (பாரம்பரிய) தகுதி விதிகளை மட்டும் உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.
(1) A யும் B யும் (2) B யும் C யும்
(3) B யும் D யும் (4) D யும் E யும்

**26.** சுற்றாடலுடன் தொடர்பான பிரசைகளின் பொறுப்பாக அமைவது,
(1) அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது சூழல் கிரயத்தைக் கணிப்பிடல்
(2) அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் சூழல் நேயமான பிரசைகளை உருவாக்குதல்
(3) எப்போதும் சூழல்நேயமான வாழ்க்கை முறையொன்றைப் பின்பற்றுதல்
(4) சுற்றாடலுடன் தொடர்புடைய நீதி சட்டகத்திற்கு ஏற்புடையதாக செயற்பட பிரசைகளின் மனப்பாங்குகளை அபிவிருத்தி செய்தல்

**27.** அபிவிருத்தி அடைந்த நாடுகளின் இரண்டு இயல்புகளை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.
(1) நகரக் குடித்தொகை குறைவாக இருப்பதுடன் சிசு மரண வீதமும் குறைவாகும்
(2) ஆயுட்கால எதிர்பார்ப்பு உயர் மட்டத்தில் உள்ளதுடன் குடித்தொகையின் வளர்ச்சி வீதமும் அதிகமாகும்
(3) பௌதிக வாழ்க்கை தரச் சுட்டி உயர்வாகவும் வெளிநாட்டுச் செலவாணி வருமானங்கள் குறைவாகவும் காணப்படும்.
(4) மனித அபிவிருத்தி சுட்டி உயர்வாக இருந்த போதிலும் குடித்தொகை வளர்ச்சி வீதம் குறைவானது.

**28.** இலங்கையில் மனித உரிமைகளின் அமுலாக்கம் தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.
(1) ஏதேனும் நிறைவேற்று அல்லது நிருவாக செயலின் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்படுமாயின் உயர் நிதிமன்றத்திற்கு முறைப்பாடு செய்து நியாயமான தீர்வைப் பெற சகல மக்களுக்கும் முடியும்.
(2) அடிப்படை உரிமை மீறல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்துப் பொருத்தமான சிபாரிசுகளைச் செய்யும் அதிகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு உள்ளது.
(3) எந்த ஒரு பிரசைக்கும் மனித உரிமைகள் மீறல் தொடர்பான செயற்பாட்டின் போது வழங்கப்பட்ட தீர்ப்பு திருப்தியை ஏற்படுத்தாதிருக்குமாயின் ஐக்கிய நாடுகளின் மனித உரிகைள் ஆணைக்குழுவிற்கு முறைபாட்டைச் செய்ய முடியும்.
(4) அரசாங்க அல்லது உள்ளூராட்சி நிறுவகத்தின் உத்தியோகத்தர் ஒருவரினால் மனித உரிமை மீறல் பற்றிய முறைபாட்டை விசாரித்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் நிருவாக செயற்பாடுகள் பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஓம்புட்ஸ்மன்) உள்ளது.

**29.** நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி தொடர்பாக பிரசைகளின் கடமையாகக் கருதப்படக்கூடியது பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) மிகை நுகர்வைத் தவிர்த்தல்
(2) சூழல் நேயமான பொருட்கள் மற்றும் சேவை வழங்குனர்களை ஊக்குவித்தல்
(3) சுற்றாடல் தொடர்பான நியமங்களை அறிமுகம் செய்தல்
(4) சுற்றாடல் மீதான தாக்கங்களை மதிப்பிடல்

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka.
Department of Examinations, Sri Lanka.

25664

**30.** ஒரு நாட்டின் வெளிநாட்டு தேறிய காரணி வருமானத்தைக் கவனத்திற் கொண்ட பின்னர் வருடமொன்றில் உற்பத்தி செய்யப்படுகின்ற, சகல பண்டங்கள் மற்றும் சேவைகளின் மொத்த பெறுமானம் என்ன பெயரால் அழைக்கப்படும்?

(1) மெய்நிகர் மொத்த தேசிய உற்பத்தி (2) நிதிசார் மொத்த தேசிய உற்பத்தி
(3) மொத்த தேசிய உற்பத்தி (4) பசுமை உள்நாட்டு உற்பத்தி

**31.** இயற்கைச் சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற இயற்கையான காரணங்கள் இரண்டினை உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) பாலைவனமாதல், உவர்த்தன்மை
(2) சூறாவளிகள், சுனாமி
(3) பனியாறுகள் உருகுதல், சமுத்திர நீர் மட்டம் உயர்வடைதல்
(4) பூகோளம் வெப்பமடைதல், அமில மழையின் வீழ்ச்சி

**32.** சுற்றாடல் அழிவடைவதற்கான பிரதான காரணமாகக் கருதப்படுவது மக்களினது

(1) வறுமை நிலையாகும் (2) கல்வி இன்மை
(3) அறியாமையாகும் (4) தவறான மனப்பாங்குகளாகும்

**33.** சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் உள்ளடங்கும் பிரதான சட்ட ஆவணங்களின் எண்ணிக்கை

(1) 6 ஆகும். (2) 5 ஆகும். (3) 4 ஆகும். (4) 3 ஆகும்.

**34.** யுத்த நோக்கங்களுடன் உருவாக்கப்பட்ட பிராந்திய ஸ்தாபனத்திற்கான ஒரு உதாரணம்

(1) ஆசியான் (ASEAN) ஆகும். (2) நேட்டோ (NATO) ஆகும்.
(3) சார்க் (SAARC) ஆகும். (4) பிம்ஸ்ரெக் (BIMSTEC) ஆகும்.

**35.** குறித்தவொரு நாடொன்று இராஜதந்திர தொடர்புகளைக் கட்டியெழுப்புதில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய மிக முக்கிய காரணியாவது அந்நாட்டின்,

(1) புவியியல் நிலைமை (2) அரசியல் ஸ்திரத்தன்மை
(3) வெளிநாட்டுக் கொள்கை (4) பொருளாதாரக் கொள்கை

**36.** சர்வதேச தொடர்புகளின் தற்கால நிலையை நோக்கும் போது காணக்கூடிய பிரதான பண்பு

(1) சர்வதேச பயங்கரவாதத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகும்
(2) பல்தேசியக் கம்பனிகள் பலவீனமான நாடுகளின் வளங்களை சூறையாடுவதாகும்
(3) பலமிக்க அரசுகள் தமது அதிகாரத்தை வலுப்படுத்த முயற்சித்தலாகும்
(4) பலமிக்க அரசுகள் பலவீனமான நாடுகளின் மீது பல்வேறு வகையான செல்வாக்குகளைச் செலுத்துதலாகும்

**37.** பின்வரும் எந்த அமைப்பின் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் 'சப்தா' (SAPTA) மற்றும் 'சப்தா' (SAFTA) வர்த்தக ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டன?

(1) ஆசியான் (2) பிம்ஸ்ரெக்
(3) ஐரோப்பிய ஒன்றியம் (4) சார்க்

**38.** அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போன்று அபிவிருத்தியடையும் நாடுகளும் பொதுவாக முகங்கொடுக்கும் பிரச்சினையொன்று

(1) சாதகமற்ற சென்மதி நிலுவை காணப்படுதல்
(2) அரசியல் ஸ்திரத்தன்மையற்று இருத்தல்
(3) சர்வதேச பயங்கரவாதிகளின் தாக்கம்
(4) உள்ளூர் செல்வங்களின் (வளங்களின்) உரித்துரிமை வெளிநாட்டவரிடம் காணப்படல்

**39.** நாடுகளுக்கிடையிலே சமாதான இராஜதந்திரத் தொடர்புகளைப் பேணும் பிரதான ஊடகமாவது

(1) தூதுவர் சேவையாகும் (2) பாதுகாப்பு அமைச்சாகும்
(3) சனாதிபதி அலுவலகமாகும் (4) வெறிநாட்டு அலுவல்கள் அமைச்சாகும்

**40.** மேலேயுள்ள **நிரல் I** ஆனது ஐக்கிய நாடுகளின் முக்கிய நிறுவனங்கள் மூன்றினையும் **நிரல் II** ஆனது அவற்றிற்குரிய அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் சிலவற்றையும் காட்டுகிறது.

| **நிரல் I** | **நிரல் II** |
|---|---|
| 1 பொதுச் சபை | A ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப் படையைக் கட்டுப்படுத்தல் |
| 2 பாதுகாப்புச் சபை | B ஆயுதங்களை கட்டுபடுத்துவதற்கான திட்டங்களை அமுலாக்குதல் |
| 3 ஐக்கிய நாடுகள் செயலகம் | C ஆயுதத் தவிர்ப்பு, ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பான கொள்கைகளைப் பரிசீலித்தலும் சிபாரிசுகளைச் செய்தலும் |
| | D மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் |

**நிரல் I** இன் ஒழுங்குமுறை வரிசையில் பொருந்தும் வகையில் **நிரல் II** ஐ ஒழுங்குபடுத்தும் போது பெறப்படும் சரியான விடை எதது?

(1) A, B, C (2) B, A, D (3) C, B, A (4) D, C, B

* *

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka.
Department of Examinations, Sri Lanka.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**62 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civics Education I, II

## (62) குடியியற் கல்வி II

* **முதலாம்** வினா கட்டாயமானதாகும்.
* **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** (i) சனநாயகம் பற்றிய வரைவிலக்கணங்களை முன்வைத்த பிரபல நபர்கள் **இருவரைப்** பெயரிடுக.

(ii) அரசொன்றுக்கு பொறுப்பளிக்கப்படும் **இரண்டு** பணிகளை எழுதுக.

(iii) கூட்டாட்சியொன்றின் அம்சங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iv) நல்லாட்சியின் அடிப்படை அம்சங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(v) பண்டங்களின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் பிரதான நுட்பமுறைகள் **இரண்டைப்** பெயரிடுக.

(vi) ஜோன் கல்ருனின் முக்கோண மாதிரியில் காட்டப்பட்டுள்ள மோதல் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற அடிப்படைக் காரணிகள் மூன்றில் **இரண்டைப்** பெயரிடுக.

(vii) நீதவான் நீதிமன்றத்தினால் விசாரணை செய்யக் கூடிய **இரண்டு** வகை வழக்குகளைப் பெயரிடுக.

(viii) 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு யாப்பின் கீழ் சட்டத்துறையின் (பாராளுமன்றம்) பிரதான அதிகாரங்கள் மற்றும் பணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ix) இலங்கை அரசாங்கம் பெண்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக எடுத்துள்ள படிமுறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(x) சமூக சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படுவதனால் உருவாகும் **இரண்டு** விளைவுகளை பெயரிடுக.

(02 × 10 = 20 புள்ளிகள்)

**2.** (i) இலங்கை வாக்காளர்களுக்கு தமது வாக்கைப் பயன்படுத்தக் கிடைக்கும் **இரண்டு** தேர்தல் வாய்ப்புக்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சனநாயக ஆட்சி முறையொன்றில் எதிர்க்கட்சியினால் நிறைவேற்றப்படவேண்டிய பணிகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (அ) அரசியல் கட்சி முறையின் **இரண்டு** வெவ்வேறு வகைகளைப் பெயரிடுக.

(ஆ) போட்டிக் கட்சி முறையொன்றின் **மூன்று** நல்லியல்புகளைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

**3.** (i) ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி தடைப்படல் மற்றும் சமூக நீதி அற்றுப்போதல் ஆகியவற்றில் செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** காரணங்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பல் கலாசார சமூகமொன்றின் சக வாழ்வுக்காகப் பிரசையொருவரால் தேர்ச்சி பெற வேண்டிய குணவியல்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) பல் கலாசார சமூகமொன்றில் நல்லாட்சியைச் செயற்படுத்துவதனால் ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய நல்விளைவுகள் **மூன்றை** விவரிக்க. (05 புள்ளிகள்)

**4.** (i) மோதலை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற பிரதான **இரண்டு** மூலங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மோதலைத் தவிர்ப்பதற்காக மத்தியஸ்தர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் போது. கவனத்திற் கொள்ள வேண்டிய **மூன்று** விடயங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) மோதல்களைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்வதின் முக்கியத்துவத்தை **மூன்று** விடயங்களின் துணையுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka.
Department of Examinations, Sri Lanka.

**5.** (i) சட்டத்தின் மூலாதாரங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) உள்நாட்டு சட்டத்தில் அடங்கும் **மூன்று** பிரிவுகளைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையின் தற்கால நீதிமன்ற முறைமையில் உள்ள உயர்வான நீதிமன்றங்கள் **மூன்றைப்** பெயரிட்டு அதில் **ஒன்றின்** செயற்பாட்டை விளக்குக. (05 புள்ளிகள்)

**6.** (i) மனித உரிமைகளை வென்றெடுப்பது தொடர்பாக முக்கியத்துவம் பெறுகின்ற வரலாற்று ரீதியான **இரண்டு** சந்தர்ப்பங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) மனித உரிமைகளின் தன்மைக்கேற்ப அவற்றைப் பிரித்துக் காட்டக்கூடிய உரிமை வகைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (அ) ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயத்தை தயாரிக்கும் போது அடிப்படையாகக் கொண்ட பிரதான நோக்கங்கள் **இரண்டைப்** பெயரிடுக.

(ஆ) சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இலங்கை எடுத்துள்ள படிமுறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

**7.** (i) சுற்றாடற் தொகுதியில் உயிரற்ற கூறுகள் **இரண்டைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) சுற்றாடலிருந்து மனிதனுக்கு கிடைக்கும் **மூன்று** சேவைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) நிலையான அபிவிருத்தியைப் பேணுவதற்காக அரசினால் ஆற்றப்பட வேண்டிய கடமைகள் **மூன்றைக்** குறிப்பிட்டு அதில் **ஒன்றைப்** பற்றி விவரிக்க. (05 புள்ளிகள்)

* * *

Department of Examinations, Sri Lanka.
Department of Examinations, Sri Lanka.